**போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி - 2020**

போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஒக்தோபர் 28 ஆம் திகதிய 3425 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டங்களின் ஆரம்பக் கட்டத்தின் போது சாத்தியவள ஆய்வு, விரிவான வடிவமைப்பு மற்றும் பெறுகை ஆவணங்களைத் தயாரித்து, அமுல்ப்படுத்தல் ஆதரவை வழங்குவதன் மூலம் வீதி, புகையிரத பதை மற்றும் துறைமுக உப துறைகளில் முன்னுரிமைப் போக்குவரத்து செயற்திட்டங்களின் தொடக்கத் திறனை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்ட நடவடிக்கைகள் வீதிகள், புகையிரத பாதைகள் மற்றும் துறைமுகங்கள் எனும் பெயரிலான மூன்று (03) கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,697.48 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 11.34 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1,496.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 200.58 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 4 இன் பிரகாரம் செயற்திட்டத்தால் தாங்கிக்கொள்ளப்படும் மொத்த வட்டி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும், ரூபா 6 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 40,434 தொகையான வட்டி மாத்திரமே நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்கு இரண்டு (02) சதவீத வட்டி கணிப்பீடு பயன்படுத்தப்பட முடியாது. | செயற்திட்டத்துடன் தொடர்புடைய நிர்மாண காலப்பகுதியினுள் உருவாக்கப்படும் வட்டிகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 4 கடன்பெறல் கிரயத்தின் பிரகாரம் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையின் பிரகாரம் செயற்திட்டத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அனைத்தும் ஆண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அது நிதி நிலைமைக் கூற்றின் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு கணக்குப் புத்தகங்களிற்கு எடுக்கப்பட்டிருக்காதமையு | 1.82 | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் RDA இற்கு மாற்றப்பட்ட சொத்துக்களை முறையாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | RDA இற்கு மாற்றப்பட்ட சொத்துக்கள் செயற்திட்டக் கணக்கில் தனித்தனியாகக் காட்டப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டு மற்றும் கட்டுப்படுத்தப்படும் சொத்துகளின் பெறுமானத்தேய்வு மூலதனமாக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட சொத்துக்களின் மீதி சரியாகக் குறிப்பிடப்பட்டிருக்காதமையும் அவதானிக்கப்பட்டது. | | | |
| (இ) | SLPSAS 3 இன் 47(அ) பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டின் நாணயமாற்று இலாபம்/ நட்டம் முன்னைய ஆண்டு சீராக்கமாக திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் அத்தகைய நாணயமாற்று இலாபம்/நட்டம மீளாய்வாண்டிற்கான கொடுக்கல் வாங்கல்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன. | 3.77 | இச் செயற்திட்டம் இலாபம் சார்ந்த நிறுவனம் அல்ல என்பதாலும் இது பங்குதாரர்களின் தீர்மானங்களில் எந்தவிதமான பொருண்மையான தாக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கவில்லைல என்பதாலும் இச் செயற்திட்டத்திற்கு இது ஒரு பொருண்மையான பிழை அல்ல. | நடைமுறை ஆண்டிற்கு சீராக்காமல் குறித்துரைக்கப்பட்ட முன்னையய ஆண்டிற்கு ஏற்றவாறு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

இதுவரை செயற்திட்டத்தால் பூர்த்தி செய்யப்படுவதற்கு இனங்காணப்பட்ட பணி விடயங்களில், ரூபா 338 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்திலான ஆலோசனை (தனிநபர்) - சர்வதேச PPP பெறுகை ஆலோசனையாளர் மற்றும் அதிவேகப் பாதை அபிவிருத்தி செயற்திட்டம் ஆகிய பெயர்களிலான இரண்டு வேலை விடயங்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தின் செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் வீதிக் கூறுகளின் மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 11.34 மில்லியன் ஆகும், இதில் ஐ.அ.டொலர் 10 மில்லியன் ADB ஆல் வழங்கப்படுகிறது. மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுமார் ஐ.அ.டொலர் 7.41 மில்லியன் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அத் திகதியில் உள்ளவாறு ஐ.அ.டொலர் 2.58 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. | அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி திட்டத்திற்கான ஆலோசனை சேவை இன்னும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, ADB கடனின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகையை முழுமையாகப் பயன்படுத்த முடியாதிருந்தது. | • செயற்திட்டம் குறித்துரைக்கப்பட்ட நோக்கம் மீது நிதிகளை பயன்படுத்த வேண்டும்.<br>• செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்த்த வருமானத்தை பெறுவதற்கு செயற்திட்டங்கள் சரியாகத் திட்டமிடப்பட வேண்டும். |